துறைமுகம் சட்டமன்றத் தொகுதி,சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் ரம்ஜான் பண்டிகையை முன்னிட்டு சென்னை பாரிமுனையில் நடந்த விழாவில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் இஸ்லாமிய பெருமக்களுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்கினார். உடன் அமைச்சர் பி.கே. சேகர்பாபு, தயாநிதி மாறன் எம்.பி., மேயர் பிரியா ராஜன், எம்.எல்.ஏ.க்கள் தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், வெற்றி அழகன் ஆகியோர் உள்ளனர்.



தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (20.04.2023) முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.இராஜ கண்ணப்பனின் மகன் டாக்டர் திலீப் குமார் தனது பிறந்த நாளை யொட்டி சந்தித்து வாழ்த்து பெற்றார். உடன் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜ கண்ணப்பன் உள்ளார்.

பழிவாங்கவும் பாரபட்சம் காட்டவுமா விசாரணை அமைப்புகள்?

‘ஆனந்த விகடன்’ ஏடு தலையங்கம்!

சென்னை, ஏப். 22 -

டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவாலிடம் மத்திய புலனாய்வுத்துறை (சிபிஐ) நடத்திய ஒன்பது மணி நேர விசாரணை, பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. ‘புதிய மதுபானக் கொள்கையை நடைமுறைப்படுத்தியதில் வணிகர்களுக்கு சலுகைகளை வழங்க, சுமார் நூறு கோடி ரூபாய் அளவுக்கு அரவிந்த் கெஜ்ரிவாலின் ஆம் ஆத்மி அரசு ஊழல் புரிந்துள்ளதா’ என்பதை விசாரிக்க டெல்லி துணைநிலை ஆளுநர் சக்சேனா அனுமதி அளித்ததன் பேரில் நடைபெறும் விசாரணை இது. இதே மதுபானக் கொள்கை ஊழல் விவகாரத்தில் ஏற்கெனவே டெல்லி துணை முதல்வர் மணிஷ் சிசோடியா கைது செய்யப்பட்டுச் சிறையில் இருக்கிறார். ஓய்.எஸ்.ஆர் காங்கிரஸ், பாரத் ராஷ்ட்ரிய சமிதி என்று பல கட்சிகளின் தலைவர்கள் இந்த வழக்கில் விசாரிக்கப்பட்டு வருகின்றனர். இந்தக் கட்சியினர் மட்டுமல்ல... காங்கிரஸ் தொடங்கி பல எதிர்க்கட்சியினரையும் சி.பி.ஐயும் அமலாக்கத்துறையும் துரத்துகின்றன. சோனியா காந்தியும் ராகுல் காந்தியும்கூட விசாரணைக்கு ஆளாகினர்.

“தவறுகளை விசாரிப்ப தற்காகவே அந்த அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. எதிர்க்கட்சி



அரசியல்வாதிகள் தவறு செய்தால் அவர்களை இந்த அமைப்புகள் விசாரிப்பதில் என்ன தவறு?” என்று பா.ஜ.க தலைவர்கள் பலர் பேசுகிறார்கள். ஊழலும் முறைகேடுகளும் வேரறுக்கப்பட வேண்டும் என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்தில்லை. ஆனால், இந்த அமைப்புகளின் விசாரணைக்கரம் நீளும் தருணங்களும், இவற்றால் வளைக்கப்படும் மனிதர்களும், இந்த அமைப்புகள் பாரபட்சமின்றி நடக்கின்றனவா என்ற சந்தேகத்தையே ஏற்படுத்துகின்றன.

குஜராத்தில் மாநிலங்களவை உறுப்பினர் தேர்தல் நடைபெற்ற போது, அம்மாநில காங்கிரஸ் எம்.எல்.ஏக்களை பெங்களூரு அழைத்து வந்து கர்நாடக காங்கிரஸ் தலைவர் டி.கே.சிவக்குமார் பாதுகாப்பில் வைத்திருந்தனர். அந்த நேரத்தில் அவர் வருமானவரி சோதனைக்கும் அமலாக்கத் துறை சோதனைக்கும் ஆளானார். 2020 ஜூலையில் ராஜஸ்தானில் அசோக் கெலாட் தலைமையிலான காங்கிரஸ் அரசுக்கு எதிராகக் கலகம் செய்தார் துணை முதல்வர் சச்சின் பைலட். அப்போது எம்.எல்.ஏக்களைப் பாதுகாத்த முதல்வர் கெலாட்டின் சகோதரர் அமலாக்கத்துறை சோதனைக்கு ஆளானார்.

இப்போது அஸ்ஸாம் முதல்வராக இருக்கும் ஹிமந்த பிஸ்வா சர்மா, காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் அமைச்சராக இருந்தவர். சாரதா சிட் ஃபண்ட் ஊழல் வழக்கில் சி.பி.ஐயால் விசாரணை செய்யப்பட்டவர்.அவர் பா.ஜ.கவுக்கு வந்ததும் காட்சிகள் மாறிவிட்டன. திரிணாமூல் காங்கிரஸில் இருந்த சுவேந்து அதிகாரி, தெலுங்கு தேசம் கட்சியில் இருந்த ஒய்.எஸ்.சௌத்ரி என்று சிலர் பா.ஜ.கவுக்கு வந்தபிறகு அவர்கள் மீதான வழக்குகள் வேகம் எடுக்கவில்லை. மகாராஷ்டிரா எம்.எல்.ஏ ஹர்ஷ்வர்தன் பாட்டீல், “காங்கிரஸிலிருந்து பா.ஜ.கவுக்கு வந்தபிறகு விசாரணைத் தொந்தரவுகள் இல்லாமல் நிம்மதியாகத் தூங்குகிறேன்” என்றார். அதே மகாராஷ்டிராவின் சாங்லி தொகுதி எம்.பி சஞ்சய் பாட்டீல், “பா.ஜ.கவில் சேர்ந்தபிறகு எனக்கு அமலாக்கத் துறை பற்றி பயமில்லை” என்று மேடையிலேயே பேசினார்.

2014ம் ஆண்டுக்குப் பிறகு அரசியல்வாதிகள்மீது அமலாக்கத் துறை வழக்குகள் பாய்வது நான்கு மடங்கு அதிகரித்துள்ளது. 95% வழக்குகள் எதிர்க்கட்சியினர் மீது தான் என்கிறது புள்ளிவிவரம். எதிர்க்கட்சியினரைப் பழிவாங்குவதற்கும், தங்களுக்கு சாதகமான அரசியல் நிலைப்பாட்டை எடுக்க பேரம் பேசுவதற்கும்தான் இந்த சோதனைகளும் வழக்குகளும் பயன்படுத்தப்படுகின்றன என்பது பலரின் குற்றச்சாட்டு. தங்கள் நேர்மையை இந்த விசாரணை அமைப்புகள் மக்கள் மன்றத்தில் உறுதி செய்ய வேண்டிய தருணமிது.

-நன்றி
ஆனந்த விகடன்
26.4.2023

சாலை வசதி: தேர்தலைப் புறக்கணிப்பதாக அறிவித்த

அரச நத்தம் மலைவாழ் மக்கள் கோரிக்கை நிறைவேற்றம்!

மக்களவை உறுப்பினர் டாக்டர். டி.என்.வி.செந்தில்குமார் அறிக்கை!

தருமபுரி, ஏப். 22-

தேர்தலைப் புறக்கணிப்பதாக அறிவித்த மக்களிடம் கொடுத்த வாக்குறுதியை தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் டி.என்.வி.செந்தில் குமார் நிறைவேற்றி யுள்ளார்.

தருமபுரி மாவட்டம் அரூர் அடுத்த கலசப்பாடி, அரசநத்தம் என்ற மலைக் கிராமங்கள் உள்ளது. இங்கு மலைவாழ் மக்கள் வசித்து வருகின்றனர். சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுகள் கடந்தும் மலைப்பகுதியில் வசிக்கும் மக்களுக்கு சாலை வசதி இல்லை. கடந்த 2019 ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலின் போது நாடாளுமன்றத் தேர்தலை புறக்கணிப்பதாக இப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

தி.மு.க. சார்பில் போட்டியிட்ட டி.என்.வி.எஸ் செந்தில்குமார் அப்பகுதி மக்களை சந்தித்து தேர்தலை புறக்கணிக்க வேண்டாம் சாலை வசதியை ஏற்படுத்தி தருவதாக உறுதியளித்தார். உறுதி அளித்தது போலவே தனது முதல் கன்னிப் பேச்சில் நாடாளுமன்றத்தில் இப்பகுதி மக்களுக்கு சாலை வசதி ஏற்படுத்தி தர வேண்டும் என பேசினார். அதன் தொடர்ச்சியாக கடந்த நான்கு ஆண்டுகளாக வனத்துறை மற்றும் மத்திய வனத்துறை அமைச்சகம் உள்ளிட்ட பல்வேறு அமைச்சகத்தை அணுகி தற்போது கலசப்பாடி அரச நத்தம் கிராமத்திற்கு சாலை வசதி செய்து பெற வனத்துறை அமைச்சகம் அனுமதி வழங்கி உள்ளது இதனால் இப்பகுதி மக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

அரூர் கலசப்பாடி அரச நத்தம் பகுதியில் மலைவாழ் மக்கள் வசித்து வருகின்றனர். 75 ஆண்டுகளாக சாலை வசதி இல்லாமல் வாழ்ந்து வருகின்றனர். 2019 ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலை புறக்கணிப்பதாக பகுதி மக்கள் தெரிவித்தார்கள் இதனை அறிந்து நேரடியாக சென்று அந்த மக்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி எந்த கட்சிக்கு வேண்டுமென்றாலும் வாக்களியுங்கள் தேர்தலை புறக்கணிக்க வேண்டாம்.

ஐந்தாண்டு காலத்தில் சாலை வசதியை ஏற்படுத்தி தருவேன் என்ற வாக்குறுதியை அளித்தேன். வெற்றி பெற்ற பிறகு இதனை நிறைவேற்ற கன்னிப் பேச்சில் கிராமத்தை குறிப்பிட்டு மத்திய அரசு அனைத்து பணிகளையும் செய்ய வேண்டும் என குறிப்பிட்டு இருந்தேன்.

தர்மபுரி மாவட்ட ஆட்சியர் மூலமாக சாலை அமைப்பதற்காக முதற்பட்ட பணியை துவக்கி தொடர்ந்து வலியுறுத்தி மாநில அரசின் வனத்துறை மூலமாக அளவீடு எடுத்த போது 5 கிலோமீட்டர் கணக்கிடப்பட்டது. 4 ஹெக்டேர் நிலம் தேவைப்பட்டது. இன்றைய சூழலில் வனப்பகுதியில் சாலை அமைப்பதற்கு ஆறு வகையான தடையின்மை அனுமதி பெற வேண்டி உள்ளது. ஒன்றிய அரசிடம் மூன்று அனுமதிகளும் உச்ச நீதிமன்றத்திடம் ஒரு அனுமதிகம் என நான்காண்டுகளாக ஒவ்வொரு தடையின்மை அனுமதி பெற்று ஒன்றிய வனத்துறை அமைச்சரிடம் நேரடியாக தெரிவித்தும் ஒன்றிய அரசு அலுவலர்கள் நேரடியாக பகுதியில ஆய்வு செய்தனர். தொடர்ந்து வலியுறுத்தி வந்ததன் அடிப்படையில் சாலை அமைக்க வனத்துறை அனுமதி வழங்கி உள்ளது.

தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆலோசனைப்படி அரசு அலுவலர்கள் மூலமாக மற்றும் ஒன்றிய அரசு ஒத்துழைப்பு மூலமாக அனுமதி கிடைத்துள்ளது. மலை கிராம மக்கள் 75 ஆண்டு காலத்திற்கு பின் முதல் முறையாக தார் சாலை என்னுடைய பரிந்துரை என்னுடைய கையெழுத்தில் பிரதம மந்திரி கிராம சாலை திட்டம் மூலமாக சாலை அமைக்கப்படும். என் வாக்குறுதிகளை நம்பி பெருவாரியான வாக்கு அளித்தார்கள் அவர்களுக்கு நான் கொடுத்த வாக்குறுதியை நான்கு ஆண்டுகளில் நிறைவேற்றி இருக்கிறேன்.

இவ்வாறு செந்தில் குமார் எம்.பி. தெரிவித்துள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சி
மழைநீர் வடிகால் துறை

ம.நீ.வ.து.ந.க .எண்.பி2/1780/2023

இருஉறை குறுகிய கால முறையில் மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பு

வ. எண்	பணியின் விவரம்	பணியின் அலுவலக மதிப்பு 18% வரி உட்பட (ரூபாய் இலட்சத்தில்)	முன் வைப்புத் தொகை	ஒப்பத்திற்கான தகுதியுள்ள வகுப்பு
1	மண்டலம்-4, வார்டு-39 & 40ல் உள்ள A.E. கோயில் தெரு (ரீச் -1&2) மற்றும் குறுக்கு தெருவில் பழைய மழைநீர் வடிகால் இடித்து / புதிய மழைநீர் வடிகால் அமைக்கும் பணி சிப்பம் எண்.42 (1 சிப்பம்)	639.14 இலட்சம்	பணியின் அலுவலக மதிப்பில் 1%	வகுப்பு - 1

1. நிறைவு செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்படுவதற்கான கடைசி நாள் 03.05.2023 மாலை 3.00 மணி
2. ஒப்பந்தப்புள்ளிகளை சமர்ப்பிக்க வேண்டிய வலைதளம் https://tntenders.gov.in
3. ஒப்பம் திறக்கும் நாள் மற்றும் நேரம் 04.05.2023 மாலை 3.30 மணி

செ.ம.தொ.இ / 2251 / ஒப்பந்தப்புள்ளி / 2023

கண்காணிப்பு பொறியாளர் (ம.நீ.வ.து)

சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்

இன்று பாவேந்தர் நினைவு நாள்!

புதியதோர் உலகம் செய்வோம்!

“நிமிர்ந்த நோக்கு!
நெரித்த புருவம்!
நீர் வீழ்ச்சி ஓசை!
நெற் கதிர்கட்டு
மீசை! “
தோற்றம் கொண்டவர்
என்று முத்தமிழறிஞர்
கலைஞர் அவர்களால்
போற்றப்பட்ட

புரட்சிக்கவிஞர்
அவர்களின்
60 ஆவது ஆண்டு
நினைவு நாள்

சாதி மத பேதங்கள்
மூட வழக்கங்கள்
தாங்கி நடைபெற்று
வரும் சண்டை
உலகுதனை
ஊதையினில்
துரும்புபோல்
அலைக்கழிப்போம்!
பின்னர்
ஒழித்திடுவோம் !
புதியதோர்
உலகம் செய்வோம்!
பேதமிலா அறிவுடை
அவ்வுலகிற்கு
பேசு சுயமரியாதை

எனும் பெயர்
வைப்போம் !
ஈதே காண் !
சமூகமே !
யாம் சொன்ன
வழியில்
ஏறு நீ ! ஏறு நீ !
ஏறே !!!

...என்ற
புரட்சிக்கவிஞர்
அவர்களின்
நினைவு நாளில்
நிறைவேற்ற
உறுதி ஏற்போம் !

கே.வி.ஆர்

இன்று பாவேந்தர் நினைவு நாள்!

புரட்சிக் கவியின் புகழ்வாழ்க!

நீந்தும் கப்பல் மூழ்கி விடாமல்
நிறுத்தும் நங்கூரம்! அந்த
நெடிய வெற்பையும் இடித்திடும் தோள்கள்!
நிமிர்ந்த கம்பீரம்!
பூந்தமி ழுக்குத் தீங்கொன்று வந்தால்
பொங்கிடும் வெங்கோபம்! மொழிப்
போருக்குத் தீட்டிய வரிகள் அனைத்தும்
பூபாளச் சங்கீதம்!

தமிழுக்கும் அமுதென்று பேர்என்று கூவினான்!
தடந்தோள் உரமூட்டி! அவன்
தாலாட்டுப் பாட்டிலும் எழுப்பிவிட் டான்!நமைத்
தன்மான உணர்வேற்றி!
சிமிழுக்குள் கிடந்த தமிழுக்குத் தந்தான்
சிறகுகள்! ஒளிகூட்டி! எட்டுத்
திசைகளும் தமிழை வணங்கவைத் தான்!மலைச்
சிகரத்தில் கொடிநாட்டி!

கொஞ்சும் அழகின் சிரிப்பால் இன்பம்
கொடுத்தான் துயர்மாற்றி! சுடர்
கொளுத்தி மகிழ்ந்தான் இருண்ட வீட்டிலே
குடும்ப விளக்கேற்றி!
தஞ்சம் வந்தமொழி தமிழை ஆளவோ?
தடுத்தான் இடர்வீழ்த்தி! இளந்
தமிழச்சி கையில் கத்தி கொடுத்தான்
தாய்த்தமிழ் நிலம்வாழ்த்தி!

கழுத்துப் பிடரி சிலிர்க்க எழுந்தான்
கண்களில் அனல்தேக்கி! இங்குக்
கால்வைத் திடுமோ இந்தி?என்று ஆர்த்தான்
களத்தில் பகைநோக்கி!
எழுத்து வடிவில் நெருப்பை உமிழ்ந்தான்
எரிமலை உண்டாக்கி! அவன்
எடுத்துப் பிடித்தது எழுதுகோல் அல்ல!
எந்திரத் துப்பாக்கி!

மைந்தர்க ளே,தமிழ் அன்னையைக் காக்க
வருகெனக் குரல்கொடுத்தான்! இங்கு
மானுடச் சமுத்திரம் நான்என்று கூவும்
மகத்துவம் அவன்படைத்தான்!
பைந்தமிழ் எங்கள் உயிர்என்று கூறிப்
பாட்டில் முரசொலித்தான்! தமிழ்ப்
படைமறம் காட்டிப் பகைவரை வெல்லப்
பாண்டியன் பரிசளித்தான்!

வீரத் தமிழ்க்கவி இன்றிருந் தால், புது
வீறுடன் நின்றிருப்பான்! தமிழ்
வெற்றி மாலையை முதல்வர்க்குச் சூட்ட
விரும்பிச் சென்றிருப்பான்!
பேரன் “தளபதி” ஆட்சியின் மாட்சிப்
பெருமையைக் கண்டிருப்பான்! உயர்
பீடு மிகும்தமிழ் நாடும் இதுவெனப்
பெருமிதம் கொண்டிருப்பான்!

அதிர்வலை தந்த கவிஞன் நினைவுநாள்!
அவன்தன் தாள்வாழ்க! அவன்
அள்ளிப் பொழிந்த அருவி நிகர்த்த
அமுதத் தமிழ்வாழ்க!
புதுவைப் புலவன் காண விழைந்த
புதுமைப் புவிவாழ்க! புகழ்
போற்றிக் கூடுவோம்! ஏற்றிப் பாடுவோம்!
புரட்சிக் கவிவாழ்க!

கவிச்சுடர்
கவிதைப்பித்தன்